சிவகங்கை மாவட்டம் பால் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்க உறுப்பினர்களுக்கு ஊக்கத்தொகையை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித் எம்.எல்.ஏ.க்கள் திருமதி தமிழரசிரவிக்குமார், எஸ்.மாங்குடி, திருப்புவனம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க தலைவர் த.சேங்கைமாறன், மாவட்ட கவுன்சிலர் நாகனி செந்தில்குமார், நகர் மன்றத்தலைவர் சி.எம்.துரைஆனந்த், ஊராட்சி மன்றத் தலைவர் கே.எஸ்.எம்.மணிமுத்து ஆகியோர் உள்ளார்கள்.

பால் உற்பத்தியாளர்களுக்கு ரூபாய் 1 கோடி ஊக்கத்தொகை!

பால் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் கிராமங்களில் பொருளாதார வளர்ச்சி ஏற்படும்!

அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் பேச்சு!

சிவகங்கை, நவ. 11 - சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக அரங்கத்தில் பால்வளத்துறை சார்பில் ஆவின் பால் உற்பத்தியாளர் களுக்கான ஊக்கத்தொகை வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தலைமையில் நடைபெற்றது.

411 சங்கங்களில் உள்ள 8936 உறுப்பினர்களுக்கு ரூபாய் ஒரு கோடியே ரூ.6 லட்சத்து 791 ஊக்கத்தொகையினை வழங்கி கூட்டுறவுத்துறை அமைச்சர் அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் பேசியதாவது:

கிராமங்களில் கால் நடைகள் வளர்ப்பதன் மூலம் கிராமத்தில் மக்களுக்கு பொருளாதார வளர்ச்சி ஏற்படும். விவசாய வேலைகளை தவிர கால்நடை வளர்த்தால் அதிக அளவில் வருமானம் அடைய வாய்ப்பு உள்ளது. பால் கொள்முதல் விலையை அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கை பரவலாக உள்ளது .அரசு பால் கொள்முதலை பெற்று நுகர்வோர்களுக்கு வழங்குகிறது. இருதரப்பினரையும் சமமாக கருத வேண்டிஉள்ள தால் பால் உற்பத்தியாளர்களுக்கு விலையை உயர்த்தி தர முடியாத சூழ்நிலை உள்ளது. இதனால் நுகர்வோர்களையும் உற்பத்தியாளர்களையும் அரசு சமமாக பாவித்து வருகிறது.

கிராமங்களில் கால்நடைகளை அதிக அளவில் வளர்த்திட வேண்டும். விவசாயத்திற் கான உரம் உட்பட ஈடுபொருட்கள் விலை அதிகரித்துள்ளது. இதேபோல் கால்நடை வளர்ப்பதற்கான தீவனங்கள் புண்ணாக்கு விலைகள் அதிகரித்து வருகின்றது. தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த பொழுது அதிக அளவில் கால்நடைகளை வளர்ப்பதில் மிகவும் தனி அக்கறை எடுத்துக் கொண்டார். அதில் மாடுகள் வளர்ப்பதில் அதிக அளவில் ஊக்கப்படுத்தி தமிழகத்தில் வெண்மை புரட்சியை ஏற்படுத்தினார். இதனால் தமிழகத்தில் பால் அதிக அளவில் உற்பத்தியாகிறது. சிவகங்கை இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு லட்சத்து 35 ஆயிரத்து 653 உறுப்பினர்கள் பால் கூட்டுறவு சங்கத்தில் உள்ளார்கள்

இதில் சிவகங்கை மாவட்டத்தில் 1லட்சத்து 6ஆயிரத்து 791 உறுப்பினர்களும், ராமநாதபுரம் மாவட்டத்தில் 29,77,742 உறுப்பினர் களும் உள்ளனர்.இதன்மூலம் சிவகங்கை மாவட்டத்தில் 80 சதவீதம் பால் உற்பத்தி செய்யப்படு கிறது.

1983ம் ஆண்டில் சிவகங்கை இராமநாதபுரம் மாவட்ட பால் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கம் துவங்கப்பட்டு நல்ல முறையில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இரண்டு மாவட்டங்களில் 547 கூட்டுறவு சங்கங்களைச் சேர்ந்த 11,832 உறுப்பினர்களுக்குசென்ற ஆண்டு ஊக்கத்தொகை 50 பைசா வீதம் ஒரு லட்சத்து ஒரு கோடி 35 லட்சத்து 653 80 ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்கப் பட்டது. இந்தாண்டு 411 கூட்டுறவு சங்கங்களுக்கு 8936 உறுப்பினர்களுக்கு 1,06,0791 ஊக்கத்தொகை வழங்கப்படு கிறது. தீபாவளி பண்டிகை முன்னிட்டு முதல்வர் இவற்றை வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டார்கள். இந்த ஆண்டு அரசின் குறிப்பிட்ட துறையில் சேர்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளருக்கு தீபாவளியினை முன் னிட்டு போனஸ் வழங்குமாறு முதல்வர் உத்தரவிட்டார்கள். அதிக அளவில் அவர்கள் எதிர்பார்த்த தொகை போனஸாக அறிவிக்கப்பட்டு வழங்கப்பட் டுள்ளது.

கிராமங்களில் கால் நடை வளர்ப்பதன் மூலம் அவர்களது பொருளாதாரத் தில் மேம்பாடு அடைய முடியும். குறிப்பாக பால் உற்பத்தியாளர்கள் கால்நடைகளில் மாடுகளை அதிகளவில் வளர்த்திட வேண்டும். கூட்டுறவுத்துறையின் வாயிலாக கால்நடைகள் வாங்கிடவும், கால்நடைகளைபராமரிப்பதற்கும் கடன்உதவி வழங்கப்படுகிறது.இதை பயன்படுத்திகொள்ள வேண்டும். இதனால் அவர்களின் வாழ்க்கைத் தரம் பொருளாதார அளவில் முன்னேற்றம் அடையும். முதல்வர் அவர்கள் பல்வேறு தரப்பட்ட திட்டங்களை பிற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக தமிழகத்தில் செயல்படுத்தி வருகிறார். இந்தியாவிலேயே முதன்மையான முதலமைச்சராக திகழ்ந்து வருகிறார். பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் வழியில் ஆட்சியை நடத்தி நல்ல திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். மக்கள் நலனில் அக்கறையுடன் செயல்பட்டு வரும் தமிழக முதல்வர். அவர்களுக்கு உங்களது ஆதரவை தர வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள் கிறேன் . இவ்வாறு அமைச்சர் பெரிய கருப்பன் பேசினார்.

நிகழ்ச்சிக்கு எம்.எல்.ஏக்கள் திருமதி தமிழரசிரவிக் குமார், எஸ்.மாங்குடி ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். இந்த நிகழ்ச்சியில் திருப்புவனம் பால்கூட்டுறவு உற்பத்தியா ளர்கள் சங்கத் தலைவர். த.சேங்கை மாறன், நகர் மன்ற தலைவர் துரை ஆனந்த், ஒன்றியக் குழு தலைவர் மஞ்சுளா பாலச்சந்தர், காஞ்சிரங்கால் ஊராட்சி மன்ற தலைவர் கே. எஸ். எம். மணிமுத்து மாவட்ட வருவாய் அலுவலர் மோகனசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டார்கள். முன்னதாக ஆவின் பொது மேலாளர் ராஜசேகர் வரவேற்றார். துணை பதிவாளர் ஆர் செல்வம் நன்றி கூறினார்.

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் நகராட்சி அலுவலகத்தில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் மகளிர் திட்டம் சார்பில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடனுதவிகளை தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் வழங்கினர். இதில் மாவட்ட வருவாய் அலுவலர் த.ப.ஜெய்பீம், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கணேசமூர்த்தி, திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், நகர கழக செயலாளர் எஸ்.முருகானந்தம், தாராபுரம் நகர்மன்றத்தலைவர் கு.பாப்புகண்ணன் உள்பட மாவட்ட, நகர, வட்டக் கழக நிர்வாகிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் ஏற்புரை!

திருமதி. சேதுமதியின் 18-ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்ச்சி!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி சிறப்புரை!

சென்னை, நவ.11- அன்னை சேது அறக்கட்டளை நடத்தும் பன்னாட்டுத் தமிழுறவு மன்ற உலக அமைப்பாளர் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர்களின் துணைவியார் திருமதி. சேதுமதி அவர்களின் 18-ஆம் ஆண்டு நினைவேந்தல் மற்றும் பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சி இன்று (11.11.2023-சனிக்கிழமை) மாலை 5.30 மணிக்கு மணியம்மையார் அரங்கம் பெரியார் திடல், சென்னையில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்ச்சி துவங்குகின்றது.

வா.மு.சே. திருவள்ளுவர் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

முனைவர் பேராசிரியர் வா.மு.சே. ஆண்டவர் அறிமுக உரை நிகழ்த்துகிறார்.

பேராசிரியர் ப.மகாலிங்கம் நிகழ்ச்சிக்கு தலைமை வகிக்கிறார்.

எம்.கே.மோகன் எம்.எல்.ஏ. முன்னிலை வகிக்கிறார்.

பேராசிரியர் இ.ஜே.சுந்தர் தொடங்கி வைத்துப் பேசுகிறார்.

தொண்டறச் செம்மல்களுக்குப் பட்டயம் வழங்கிப் பொன்னாடை போர்த்திப் பொற்கிழி வழங்கி சிறப்பிக்கிறார் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள்.

காணொலியில் வா.மு.சே.கவி அரசன், பேராசிரியர் நா.மதியழகன் - பூங்கொடி, வா.மு.சே.தமிழ் மணிகண்டன் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

முனைவர் மறைமலை இலக்குவனார் பாராட்டுரை வழங்குகிறார்.

கவிஞர் கண்மதியன், கவிஞர் இளையகோபால் ஆகியோர் வாழ்த்தி கவிதை படைக்கின்றனர்.

பாராட்டு மற்றும் பொற்கிழி ஆகியவற்றை வே.பதுமனார், வழக்கறிஞர் தி.ச. சிவக்குமார், சாயி இரவிச்சந்திரன், கவிஞர் இளைய கோபால், இரா.மோகன சுந்தரம், வை.மா.குமார், கவிஞர் முகம் இளமாறன், சுரதா கல்லாடன், கவிஞர் எழில் வேந்தன், கவிஞர் முருகையன், வேலன் தளபதி, முனைவர் சப்ராபீவி அல் அமீன், பாவலர் அறிவழகன், சிவசாமி, பாலமீரா, அ.சி.சின்னப்பத்தமிழர் ஆகியோர் பெறுகின்றனர்.

பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் ஏற்புரை நிகழ்த்துகிறார்.

முனைவர் சோ.கருப்பசாமி நன்றி கூறுகிறார்.

திருவொற்றியூர் மேற்குப் பகுதி –

2 வது வட்டம் சார்பில் நீட் விலக்கு கையெழுத்து இயக்கம்!

பகுதிச் செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, நவ. 11- தமிழக மாணவர்களின் மருத்துவக் கனவை தகர்த்து மாணவ - மாணவிகளின் உயிர் குடித்து கொண்டிருக்கிற நீட் உயிர் கொல்லி தேர்வை தமிழகத்தில் இருந்து அடியோடு விலக்க வேண்டும் என்கிற கழகத்தலைவரின் ஆணையேற்று விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 50 நாளில் 50 லட்சம் கையெழுத்து என்கிற மாபெரும் கையெழுத்து இயக்கம் மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. வழிகாட்டலில் திருவொற்றியூர் மேற்கு பகுதி சார்பில் நடைபெற்று வருகிறது.

'நீட் விலக்கு நம் இலக்கு' என்கிற லட்சியத்தோடு கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வேண்டுகோளை ஏற்று திருவொற்றியூர் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் இப் பகுதியில் உள்ள அனைத்து வட்டங்களிலும், பள்ளிகள், தொழில் நிறுவன வாயில்கள், மார்க்கெட், மற்றும் இல்லம் தோறும் சென்று மாணவ - மாணவிகள், அவர்களின் பெற்றோர்கள் உட்பட பல்வேறு தரப்பினரிடமும் நீட் தேர்வுக்கு எதிரான கையழுத்துகள் ஆன்லைன் லிங்க் மூலமும், QR கோட் கொண்ட அட்டைகள் பதாகைகள் மூலமும் கையழுத்து பெறப்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக இன்று இரண்டாவது வட்டக்கழக தி.மு.க. சார்பில் எண்ணூரில் உள்ள அசோக் லேலண்ட் நிறுவன வாயிலின் நின்று தொ.மு.ச. நிர்வாகிகளோடு இணைந்து ஐநூறுக்கும் மேற்பட்ட நிறுவன தொழிலாளர்களிடம் நீட் எதிர்ப்பு கையெழுத்து பெறப்பட்டது.

இந்த நிகழ்வில் மாவட்டப் பொருளாளர் எம்.ஆனந்தன், ராயபுரம் கிழக்கு பகுதி கழகச் செயலாளர் ஆர்.செந்தில்குமார் அசோக் லேலண்ட் தொ.மு.ச. நிர்வாகிகள், எம்.மாறன் சி.ஜி.கிரிபாபு, எம். சந்திரசேகரன், டபிள்யு. செபாஸ்டின் பெஞ்சமின், பகுதி துணை செயலாளர் இ.குமரவேல் மாவட்ட பிரதிநிதி எம்.சந்திரகுமார், ந. ராம்குமார் , வட்டக்கழக அவைத்தலைவர் பாலு, விளையாட்டு அணி மாவட்ட துணை அமைப்பாளர் வை.கண்ணதாசன் வட்ட துணை செயலாளர்கள் ஆர். மதன்குமார், டி. சக்கரவர்த்தி தேவி, தகவல் தொழில் நுட்ப பணி பகுதி ஒருங்கிணைப்பாளர் எஸ். ராஜேஷ். சி. வருண் சமூக வலைதளம் தகவல் தொழில் நுட்ப அணி லைலாண்ட் ஆர்.முருகன், லைலாண்ட் எல். சரவணன் சி.முத்து, ஜி.வெற்றிச்செல்வன், சீனிவாசன், தேசப்பம்,பிரசாந்த், பூங்கொடி ச.சேதுபதி மற்றும் கழக நிர்வாகிகள் கழக உடன்பிறப்புகள் திரளாக பங்கேற்றனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

செங்கை சிவம்

நவம்பர் 11 (2015)

இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக பெரம்பூர் பகுதிக் கழகச் செயலாளர் – தலைமைச் செயற்குழு உறுப்பினர் – தேர்தல் பணிக் குழுச் செயலாளர்– கலை,இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

1989, 1996–ல் பெரம்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

அகில இந்திய கூட்டுறவு வீட்டு வசதி வாரிய தலைவராக பொறுப்பு வகித்தவர்.

"பெரம்பூர் பகுதியில் கழகத்தை வளர்த்த காவலர்களில் ஒருவராகவும் விளங்கி, அருந்தொண்டாற்றிய அருமைத் தம்பி" என்று தலைவர் கலைஞர் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

தண்டவாளத்தில் மரம் முறிந்து விழுந்து

ரயில் போக்குவரத்து பாதிப்பு - ரயில்கள் நடு வழியில் நிறுத்தம்!

நாகர்கோவில், நவ.11- கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் கன மழையால் மண் சரிவு ஏற்பட்டு அவ்வப்போது ரயில் போக்குவரத்து பாதிக்கப்படுகிறது. இந்தநிலையில் நேற்று இரவு நாகர்கோவில் திருவனந்த புரம் ரயில் பாதையில் குழித்துறை அருகே தண்டவாளத்தையொட்டி இருந்த மரம் முறிந்து விழுந்து, உயரழுத்த மின் கம்பிகள் அறுந்து தண்டவாளத்தில் விழுந்தன.

இதனால் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதே போல் நேற்று இரவு பெய்த மழையால் பள்ளியாடி அருகே தண்டவாளம் அருகே மண் சரிவும் ஏற்பட்டது. இந்த சம்பவங்கள் குறித்து அறிந்ததும் உடனடியாக மீட்புக் குழுவினர் விரைந்தனர். இந்த சம்பவம் நடந்த போது சென்னையில் இருந்து குரு வாயூர் செல்லக்கூடிய குருவா யூர் எக்ஸ்பிரஸ் நாகர்கோவிலில் இருந்து புறப்பட தயார் நிலையில் இருந்தது.

இந்த தகவல் அறிந்ததும் உடனடியாக குருவாயூர் எக்ஸ்பிரஸ் நிறுத்தப்பட்டது. இந்த சம்பவத்தின் காரணமாக மங்களூர் எரநாடு எக்ஸ்பிரஸ் ரயில் திருவனந்தபுரம் நாகர்கோவில் இடையே நேற்று இரவு திடீரென ரத்து செய்யப்பட்டது. மீட்புக் குழுவினர் சுமார் 4 மணி நேரத்துக்கு மேல் போராடி அறுந்து விழுந்த உயரழுத்த மின் பாதைகளை சரி செய்தனர். இதையடுத்து குருவாயூர் எக்ஸ்பிரஸ் புறப்பட்டு சென்றது. இன்று காலையில் இருந்து வழக்கம் போல் ரயில் போக்குவரத்து தொடங்கியது. நாகர்கோவில் எரநாடு மங்களூர் எக்ஸ்பிரஸ் ரயில், நாகர்கோவில் கொச்சுவேலி இடையே ரத்து செய்யப்பட்டது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வி.எம். தேவராஜ்

நவம்பர் 11 (1998)

வேலூர் மாவட்ட மற்றும் வேலூர் நகர அவைத் தலைவராகவும், தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினர், வேலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டார் வேலூர் நகர்மன்றத் தலைவராக ஒரு முறையும் நகராட்சி உறுப்பினராக 23 ஆண்டுகள் பணியாற்றியவர்.

வேலூர் மாவட்ட நூலகத் தலைவர், மாவட்ட கூட்டுறவு சங்கம், வேலூர் கூட்டுறவு அச்சகத் தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பேரறிஞர் அண்ணாவுடன் வேலூர் சிறையில் இருந்தவர். கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர். மிசா கைதியாக ஓராண்டு சிறை வாசகத்தை அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.